2018 ஜூன் 5]

3. பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழுகின்ற காலத்தில் வரலாறாய் வாழ்ந்து, தான் மறைந்தாலும், இன்றைக்கு உலகத்தில் வாழ்கின்ற தமிழர்களின் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்து, வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் ஆட்சியை ஒரு இம்மியளவும் குறையாமல் வழி நடத்திவரும் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல், எங்கள் கொங்கு சீமைக்கும் பெரும் பெருமையைச் சேர்த்து, மக்களோடு மக்களாய் கலந்து, தமிழக மக்கள் அனைவரின் நன்மை, தீமைகளைப் புரிந்து, அவற்றை உணர்ந்து, தீமைகளையும் நன்மைகளாக்கி, தினந்தினம் பல நல்ல அறிவிப்புகளை வெளியிட்டு, அம்மா அவர்களின் அடிச்சுவட்டை அப்படியே பின்பற்றி, ஆண்டாண்டு காலமாய் இருந்து வந்த பிரச்சினைகளான காவேரிப் பிரச்சினைக்குத் தீர்வு; ஸ்டெர்லைட் ஆலை பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு; (மேசையைத் தட்டும் ஒலி) 30 ஆண்டு காலமாகப் பேசப்பட்டு வந்த அத்திக்கடவு–அவினாசி திட்டத்திற்கு ஆணை என அடுக்கிக்கொண்டே போகின்ற அளவிற்கு பல நல்ல திட்டங்களைக் கொடுத்து, மக்களுக்கு 25 ஆண்டு காலமாக தீங்கு விளைவித்து வந்த தேவையற்ற பிளாஸ்டிக் இல்லாத தமிழகத்தை உருவாக்கிய மாண்புமிகு மக்கள் முதல்வர் அண்ணன் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு உறுதுணையாக நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் எனது கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சுற்றுச்சூழல் தினம் என்பதால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களாகிய உங்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அதிகாரிகள், பத்திரிகை நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் என்னுடைய சுற்றுச்சூழல் தின நல்வாழ்த்துகளைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)